அப்படி வருகிறபோது பேர்ணாம்பட்டு தொகுதியை அந்த மண்டலத் துணை வட்டாட்சியர் கவனித்துக் கொள்வார்கள். ஏதாவது கலவரம் ஏற்பட்டால், அங்கே போவதற்காக வட்டாட்சியர் மற்றுமுள்ள வருவாய்த்துறை அதிகாரிகளுக்கும், அதேபோல காவல் துணை அதிகாரிகளுக்கும் வேண்டிய போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 303, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

303—

பள்ளிகளில் கட்டாய மருத்துவப் பரிசோதனை

***10360**—திரு. எம். ஆண்டி அம்பலம் :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்துப் பள்ளிகளிலும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை கட்டாய மருத்துவப் பரிசோதனை நடத்த அரசு பரிசீலிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டத்தின் கீழ், இப்போது ஒரு சிறப்பு முகாம், பள்ளிக் குழந்தைகளுக்காக நடத்தப்பட்டு வருகிறது. பள்ளி நலத் திட்டத்தின் கீழ் வருடத்திற்கு ஒருமுறை பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனையும் செய்யப்பட்டு வருகிறது. மூன்று மாதத்திற்கு ஒருமுறை கட்டாயமாகப் பரிசோதனை செய்யவேண்டும் என்பது இயலாத காரியம்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுக்கு ஒரு முறை என்பது 12 மாதங்கள் ஆகிறது. மரியாதைக்குரிய பாரதப் பிரதமர் நேரு அவர்களின் பிறந்த நாளைக் குழந்தைகள் தின விழாவாகக் கொண்டாடுகிறோம். அப்படிப்பட்ட குழந்தைகளின் நலன் கருதி மூன்று மாதத்திற்கு அல்லது நான்கு மாதத்திற்கு ஒரு முறை என்று அந்த மருத்துவப் பரிசோதனையைச் செய்ய அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

1995 ஏப்ரல் 17]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஒரு முகாம் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்த முகாமிலே எல்லோருக்கும் முழுமையாகப் பரிசோதனை செய்யப்பட்டு அவர்களுக்கு என்ன நோய் என்று கண்டுபிடிக்கப்பட்டு அவர்கள் மருத்துவமனைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். அதைத் தொடர்ந்து பரிசோதனைகள் செய்வது தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கென்று மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதற்கென்று மருத்துவர்கள் இல்லாத நேரத்திலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மருத்துவர்கள் சென்று அவர்களைப் பார்க்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. எனவே அப்படி ஆண்டுக்கு ஒருமுறை பரிசோதிக்கப்படுகிறது. ஆகவே இந்த முகாம் நடத்தப்படுகிற காரணத்தால், அந்த மருத்துவர்கள் கண்டுபிடித்துக் கொடுக்கிற அந்தக் குழந்தைகளுக்குத் தொடர் சிகிச்சை கொடுப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. எனவே 6 மாதத்திற்கு ஒரு முறையோ 4 மாதத்திற்கு ஒரு முறையோ பரிசோதனை செய்ய வேண்டும் என்பது அவசியம் இல்லை. ஒரு ஆண்டுக்கு ஒரு முறை பரிசோதனையை முறையாகச் செய்தாலே இப்படிப்பட்ட பிரச்சினைகள் இல்லாமல் பார்த்துக்கொள்ள முடியும் என்று அரசு கருதுகிறது.

திரு. எம். ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளின் நலன் கருதி, ** (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்பது மறுப்பிற்குரிய விஷயம். கேள்வி நேரத்தில் அது எல்லாம் வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மூன்று மாதத்திற்கு ஒருமுறை பள்ளிக் குழந்தைகளைப் பரிசோதிப்பதில் இருக்கிற சிரமங்களைத் தெரிவித்தார்கள். மருத்துவப் பணிக்குப் போதிய அளவுக்கு மருத்துவர்கள் இல்லை என்ற கருத்தில்தான் சொல்லியிருக்கிறார்கள் என்று நம்புகிறேன். இப்போது தமிழகத்தில் இருக்கிற ** டாக்டர்கள் எல்லாம் சும்மாதான் இருக்கிறார்கள். ஆகவே அவைகளை அரசு மருத்துவமனைகளாக மாற்ற வேண்டுமென்று நான் ஒருமுறை இந்த மாமன்றத்திலே கூறியிருக்கிறேன். நகராட்சியில் இருக்கிற மருத்துவர்கள் மற்றும் மற்ற இடங்களில் பணிகள் இல்லாமல் இருக்கிற மருத்துவர்களை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பள்ளிக்கு அனுப்பி, அவர்களைச் சோதனை செய்வதில் எந்தவிதமான சிரமமும் இருக்காது. கேம்ப் என்று வருவது திருவிழா போல ஆண்டுக்கு ஒருமுறை நடப்பதால் அதில் போதிய அளவுக்கு நாட்டம் செலுத்த முடியவில்லை. ஆகவே அதற்காக தனி நாளை 3 மாதத்திற்கு ஒருமுறை நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒதுக்கச் சொல்லி, நகராட்சியின் பணியில் தேக்கம் இருக்கிற டாக்டர்களை அனுப்பி பரிசோதனை செய்வதற்கான முயற்சிகளை அமைச்சர் எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்ற குற்றச்சாட்டு கேள்வி நேரத்தில் கூடாது. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். அதாவது முடியாது என்று சொல்லவில்லை. தேவையில்லை என்று சொன்னேன். அதற்காக நியமிக்கப்படுகிற மருத்துவர்கள் ஆண்டு முழுவதும் பணியாற்றுகிறார்கள். அதே பணியைத்தான் செய்கிறார்கள். ஆனால் ஒரு பள்ளியிலே இன்று ஒரு பரிசோதனை செய்தால் மீண்டும் ஒரு ஆண்டுக்குப் பின்னர் பரிசோதனை செய்தால் போதும். அந்த ஒரு ஆண்டுக் காலத்திற்குள் அவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பள்ளிகள் அனைத்திலும் அவர் பரிசோதனை செய்யவேண்டும். அவர் அந்த ஓராண்டுக் காலத்திற்குள்ளே அனைத்துப் பள்ளிகளுக்கும் பரிசோதனை செய்கிற அளவிற்கு அவருக்கு பணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே இப்போது நடத்துவது சிறப்பு முகாம். அந்தப் பணி ரொட்டீன் ஆக நடந்துகொண்டிருக்கிறது. இந்த முகாம் தனி முகாம். இந்த முகாமில் இன்டென்சிவ் ஆக ஒரே நேரத்தில் அவர்களைக் கண்டுபிடித்து சர்வே செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே இப்போது அதைச் செய்திருக்கிறோம். அந்த அடிப்படையில் ஏறத்தாழ 75 லட்சம் குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அதிலே ஏறத்தாழ 43 லட்சம் பேருக்கு ஏதோ ஒரு சின்ன வியாதி என்ற வகையிலே இருக்கிறது. அதிலே, ஏறத்தாழ இரண்டு இலட்சம் பேருக்கு மேலே தொடர் மருத்துவச் சிகிச்சை பெற வேண்டியவர்களென்று கணக்கிட்டு அவர்களுக்கு தொடர் மருத்துவச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறோம். எனவே, இப்பொழுது இருக்கிற முறையிலே இதைச் சீராக செய்தால், வேறு எந்த மாற்றமும் தேவை இருக்காது என்று அரசாங்கம் கருதுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் இலவசமாக மாணவர்களுக்கு பள்ளிகள்தோறும் வருடந்தோறும் ஒரு முறை பரிசோதனையைச் செய்வதுபோல், அரசு அலுவலர்களுக்கும் கட்டாய மருத்துவ பரிசோதனை வருடந்தோறும் செய்வதற்கு அரசு செயல் திட்டம் வகுக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சில இடங்களிலே அவர்களாக அந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், குழந்தைகளைப் பொறுத்தவரை, அவர்கள் அதைச் சொல்லாமல் விட்டுவிடுவார்கள் அல்லது அவர்கள் கவனிக்காமல் விட்டுவிடுவார்கள் என்பதற்காக இந்த முறை வைக்கப்பட்டிருக்கிறது. அரசுத் துறையிலே பணியாற்றக் கூடியவர்கள் எல்லோரும் பொறுப்பானவர்கள். எனவே, அவர்களுக்கு ஏற்படுகிற பிரச்சினையை நிச்சயமாக அவர்கள் வந்து மருத்துவரிடத்திலே பார்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதோடு அவர்களுக்கு மருத்துவச் சிகிச்சையை பார்க்கிறபோது அரசிலே சில சலுகைகளும், அவர்களுக்கு சில உதவிகளும் செய்வதற்கான வாய்ப்புகள் கூட இருக்கிறது. எனவே, அதற்காக தனியாக கட்டாய முகாம் என்ற தேவையில்லை. ஆனால், சில இடங்களில் அவர்களாக முன்வந்து மருத்துவமனைகளிலிருந்து சென்று சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள் சில அலுவலகங்களிலே. அது தனியாக நடக்கும். அரசாங்கம் அதற்காக ஒரு திட்டம் தீட்ட வேண்டியது இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுடைய உடல் நலத்தைப் பேணுகின்ற விதத்திலே, பெற்றோர்களே, எலிமெண்டரி ஸ்கூலிலே சேர்க்கும்பொழுது அல்லது ஹைஸ்கூலிலே சேர்க்கும்பொழுது அல்லது ஹையர் செகண்டரி ஸ்கூலிலே சேர்க்கும்பொழுது அல்லது கல்லூரியிலே சேர்க்கும்பொழுது, கட்டாயமாக முழுப் பரிசோதனை குழந்தைகளுக்குச் செய்து, அதை நிறைவேற்றும் விதமாக ஒரு சான்றிதழைப் பெற்று அங்கே அட்மிஷன் செய்வார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் கல்வித் துறையும் சம்பந்தப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே, இதில் ஏதாவது முறை இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆனால் அப்படி ஒரு முறை வைக்க வேண்டிய அவசியம் இருக்காது. காரணம், நாமே பள்ளிகளிலே குழந்தைகள் சேர்ந்த பின்னாலே அவர்களுக்கு தேவையான அனைத்து சிகிச்சைகளையும் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுத்துக் கொண்டு இருக்கிற காரணத்தால் அப்படி தேவைப்படாது என்று கருதுகிறேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய ஆலோசனையைப் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பிறகு, தொடர் பரிசோதனைகள் தேவைப்படும் பள்ளிக் குழந்தைகளுக்கு அப்பொழுது ஃபாலோ அப் கார்டு எவ்வாறு முறைபடுத்தப்படுகிறது ? குறிப்பாக இதய நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தனியாக ஃபாலோ அப் கார்டு இரண்டு தயாரித்து, ஒன்றை பெற்றோர்களுக்கும், மற்றொன்றை ஆசிரியர் மூலம் மேல் மருத்துவமனைக்கும் அனுப்புவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த முகாமிலே கண்டுபிடிக்கப்பட்ட இதய நோயால் பாதிக்கப்பட்டிருக்கிற குழந்தைகள் பல பேர்களுக்கு சென்னை மருத்துவமனையிலே அவர்களுக்கு அறுவைச் சிகிச்சையெல்லாம் செய்யப்பட்டிருக்கிறது. தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அவர்களுக்கு ஒரு கார்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இரண்டு மூன்று கார்டு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. ஒரு கார்டு மட்டும் கொடுக்கப்படுகிறது. அதோடு, என்னென்ன நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், யார் யாருக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்று பட்டியல் எடுக்கப்பட்டு வருகிறது. அந்தப் பட்டியல் அந்தப் பள்ளியினுடைய தலைமையாசிரியரிடத்தில் கொடுக்கப்படுகிறது. பெற்றோர்களிடத்திலேயும் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கம் அவர்களை, மீண்டும் போய் அழைத்து வருவது என்பது நடைமுறையில் இயலாத காரியம். எனவே, அந்தப் பள்ளியினுடைய தலைமையாசிரியரும், பெற்றோரும் அதிலே பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவர்களும் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

1995 ஏப்ரல் 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பள்ளிகளிலும், புரட்சித் தலைவித் அவர்களுடைய மருத்துவத் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு மாதத்திற்கு ஒரு தடவை நல்ல முறையில் சிகிச்சையளித்து வருகிறார்கள். ஆனால், இதில் என்ன விஷயம் என்றால், திடீரென்று அவர்களுக்கு இதய நோயும் வருகிறது. சிரங்குகள் அதிகமாகியிருந்தால் கிட்னி நோயும் வருகிறது. இதற்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்தும், பிரதமர் நிவாரண நிதியிலிருந்தும், அதற்கு வேண்டிய செலவுகளை வாங்குவதற்கு காலதாமதம் ஆகிறது. ஆகவே, பள்ளியினுடைய தலைமையாசிரியர் அது சம்பந்தமாக தெரிவித்தால் உடனே, ஒரு நாளிலோ இரண்டு நாளிலோ கொடுத்து சீக்கிரமாக அவர்கள் குணமாவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போல நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறவர்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பணம் வேண்டுமென்று கேட்டு மனு செய்யக் கூடியவர்கள் அந்த மனுவை முறையாக பூர்த்தி செய்து கொடுத்துவிட்டால் மிக விரைவாக நடந்து விடுகிறது. அவர்கள் கேட்கின்ற சில படிவங்களை முழுமையாகப் பூர்த்தி செய்து கொடுக்காமல் இருப்பதால் காலதாமதம் ஏற்படுகிறதேயொழிய, அவர்கள் அப்ளிகேஷனை முறையாகக் கொடுத்திருந்தால் அதிலே காலதாமதம் ஏற்படாது. காரணம், முறையானவர்களுக்குக் கிடைக்க வேண்டும்; காலதாமதம் ஏற்படக்கூடாது என்று கருதுகிறோம். எனவே, அப்படி அதைப் பரிசோதிக்காமல், கவனிக்காமல் கொடுத்துவிட்டால், தவறானவர்கள் பெற்றுக் கொண்டு போய்விடுகிற சூழ்நிலை ஏற்படும். எனவேதான், அதிலே எச்சரிக்கையாக இருக்க வேண்டியிருக்கிறது. ஆனால், இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதற்காக தனியே கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் இந்தத் தகவலைக் கொடுத்து, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும் இதைத் தெரிவித்து, உடனடியாக அது பரிசீலிக்கப்பட்டு, விரைவாக இது வரவேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதுபோல, இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்னாலே எந்தக் காலத்திலேயும் கொடுக்காத அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நிவாரண நிதியிலிருந்து பணம் இப்போது அதிகமாகக் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.